DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 203/2019

Prosecution witness PW - 13

| | | |
|---|---|---|
| Name | …. | S. Sudhagar |
| Father's Name | .... | Selvamani |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 23rd day of September 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது வேலூர் மாவட்டம் பொருளாதார குற்றபிரிவு காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு செய்யாறு வட்ட காவல் ஆய்வாளராக இருந்தபோது அனக்காவூர் காவல் நிலைய குற்ற எண். 363/2018 பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 307 இ.த.ச. பிரிவுகள் மற்றும் உடனிணைந்த பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை சட்டத்தின் கீழ் உதவி ஆய்வாளர் திரு. அலெக்ஸ் என்பவர் பதிவு செய்த வழக்கை சம்பவ இடத்தை பார்வையிட்டும் பார்வை மகஜர் தயார் செய்து வரைபடம் வரைந்தும் சம்பவ சாட்சியங்களை விசாரணை செய்து சாட்சிகள் சிகாமணி, தவமணி, வசந்தாமணி, கதிர்வேல், பன்னீர்செல்வம், வேல்முருகன், ராஜமாணிக்கம், சுப்பிரமணி, காந்தா, வேலு ஆகியோர்களை தனித்தனியே

விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கின் எதிரிகளான மகேஷ், தயாளன் ஆகியோர்களை கைதுசெய்து மகஜர் கைப்பற்றியும், நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு கிடைத்ததை நான் விசாணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் மேற்படி அதே சாட்சிகளை விசாரணை செய்தபோது உதவி ஆய்வாளர் சொன்னது போன்று என்னிடம் சொன்னதால் நான் புதியதாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும் இவ்வழக்கில் எதிரிகளான ராஜேஷ், மணி, பாஸ்கரன், தேவி ஆகியோர் திருவண்ணாமலை மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றதால் எதிரிகளை கைது செய்யவில்லை. மேலும் இவ்வழக்கில் காயம் பெற்ற நபருக்கு முதலுதவி மற்றும் சிகிச்சை அளித்த மருத்துவர் நந்தினி, ஜெயகுமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்று எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 307, 341, 506(2), 326, 149, 354 இ.த.ச. பிரிவுகளின் கீழ் 31.10.2018 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.